பக்கங்கள்:-25

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | கார்த்திகை 09 | ஞாயிற்றுக்கிழமை | 26.11.2023 | அதிர்வு 117

## வாள்வெட்டுத் தாக்குதலில் இளைஞர் ஒருவர் படுகாயம்

### பருத்தித்துறையில் சம்பவம்

(எஸ்.நிதர்ஷன்)

பருத்தித்துறையில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கந்தவுடையார் 07▶

### மட்டக்களப்பில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு தடுத்து நிறுத்தம்

## ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உப தலைவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நேற்று கைது

(மட்டக்களப்பு, வெல்லாவெளி நிருபர்கள்)

மட்டக்களப்பு – வெல்லாவெளியில் முன்னெடுக்கப்பட இருந்த மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டு அதை ஏற்பாடு செய்த ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உப தலைவர் என். நகுலேஸ் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாவீரர் தினத்தை முன்னிட்டு ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் நேற்று முன்னெடுக்கப்பட இருந்த மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு வெல்லாவெளி பொலிஸாரால் நீதிமன்றத் 07▶




# தமிழரின் உணர்வெழுச்சியை அரசால் அடக்கவே முடியாது!

### நாடாளுமன்றில் சாணக்கியன் சூளுரை

**“அரசும், பொலிஸாரும், படையினரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தித் தமிழர்களை முடக்கப் பார்க்கின்றார்கள். தமிழர்களின் உணர்வெழுச்சியை அவர்களால் அடக்க முடியாது.”**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.** 07▶



## கொக்குத்தொடுவாய் புதைகுழியில் நேற்று 5 மனித எலும்புக்கூடுகள் மீட்பு

### கையில் அணியும் இலக்கத் தகடும், மணிக்கூடும் கண்டெடுப்பு

(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு – கொக்குத் தொடுவாய் மனிதப் புதைகுழியில் நேற்று இடம்பெற்ற அகழ்வின்போது 5 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன என்று முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை சட்ட வைத்திய அதிகாரி க.வசுதேவா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,


“துப்பாக்கிச் சிதறல்கள் மற்றும் சன்னங்களும் இதன்போது மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் கையில் அணியப்படும் இலக்கத் தகடு ஒன்றும், மணிக்கூடு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளன.

அகழ்வுப் பணி இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறாது. நாளை திங்கட்கிழமை அகழ்வுப் பணி நடைபெறும்.” – என்றார்.




### கிரிக்கெட் குறித்த கோப் குழு விசாரணையில் இருந்து

## ரஞ்சித் பண்டாரவை நீக்க கட்சித் தலைவர்கள் முடிவு



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டாரவை கிரிக்கெட் தொடர்பான கோப் குழு விசாரணைகளில் இருந்து நீக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு நாடாளுமன்றத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்களின் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. 07▶




கடந்த மாதத்தில் தமிழர் தரப்பிடையே பரபரப்பை ஏற்படுத்திய செய்திகளில் ஒன்று திருமலையில் உள்ள ஜனாதிபதி மாளிகை விவகாரம்.

யுத்த காலத்தில் அங்கு குடியிருந்த மக்களை உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் கலைத்து விட்டு, படைத்தரப்பு தான் ஆக்கிரமித்து, அடாத்தாகக் கைப்பற்றிய பொது மக்களின் காணிகளில் தன்பாட்டில் ஜனாதிபதி மாளிகை என்ற 07▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# இலங்கையர்களை இஸ்ரேலுக்கு அனுப்பி பிரச்சினைகளுக்கு வழிவகுக்க வேண்டாம்

## ரவூப் ஹக்கீம் எம்.பி. சபையில் தெரிவிப்பு



"இஸ்ரேலுக்கு தொழில் வாய்ப்புக்களுக்கு இலங்கையர்களை அனுப்புவதன் மூலம் அங்கு உயிரிழப்புகள் ஏற்பட்டால் அது எமது நாட்டில் தேவையற்ற பிரச்சினைகளை தூண்டக் காரணமாக அமையலாம். அத்துடன் இந்த விடயத்தில் அரசாங்கம் அரபு நாடுகளைக் கண்டுகொள்ளாது சந்தர்ப்பவாதமாகச் செயற்படக்கூடாது. அதனால் இலங்கையர்களைத் தொழிலுக்கும் அனுப்பும் விடயத்தை மீள் பரிசீலனை செய்ய வேண்டும்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

"காஸாவில் பாரிய மனித உரிமை மீறல் மற்றும யுத்தக் குற்றங்கள் இடம்பெற்று வருகின்றன. அதேநேரம் லட்சக்கணக்கான இலங்கைத் தொழிலாளர்கள் அரபு நாடுகளில் தொழில் வாய்ப்புகளில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், இலங்கையில் இருந்து இஸ்ரேலுக்கு தொழிலாளர்களை அனுப்ப நடவடிக்கை எடுத்திருப்பது கவலைக்குரிய விடயம். இவ்வாறு அனுப்பப்படும் இலங்கையர்களுக்கு அங்கு இராணுவ பயிற்சி வழங்குவதற்கான திட்டமும் இருக்கிறது.

அத்துடன், யுத்தம் காரணமாக காஸாவில் இருக்கும் தொழிலாளர்கள் அங்கிருந்து வெளியேறி வரும் நிலையில் அங்கு ஏற்பட்டு வரும் தொழில் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க இருப்பதுடன் பலஸ்தீனர்களிடமிருந்து பலவந்தமாக பறித்துக்கொண்ட காணிகளில் தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கே இலங்கையர்களுக்கு இந்த தொழில் வாய்ப்பு வழங்கப்படுகிறது. இதுதான் உண்மை நிலை. அதனால், இதுதொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்.

அத்துடன் எமது அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை பிழையான நேரத்தில் மேற்கொள்ளப்படும் பிழையான தீர்மானம் என அரபு நாடுகளின் பல தூதுவர்கள் என்னிடம் தெரிவித்திருந்தார்கள். தென்னாபிரிக்க ஜனாதிபதி, பிரேசில் ஜனாதிபதி ஆகியோர் இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவுகளைத் துண்டித்துக்கொள்ள நடவடிக்கை எடுத்து வரும் இந்த நிலையில், நாங்கள் உணர்வுபூர்வமான இந்த விடயம் தொடர்பாக கவலையுடன் பார்க்க வேண்டும்.

அரபு நாடுகள் இஸ்ரேல் தொடர்பாக கலந்துரையாடி வரும் நிலையில் நாங்கள் சந்தர்ப்பவாதிகளாகச் செயற்படக்கூடாது. ஜேர்மனில் ஹிட்லர் யூதர்களைக் கொலை செய்ததபோது அங்கு இடம்பெற்ற வெற்றிடங்களுக்கு இலங்கையர்களை அனுப்பும் நடவடிக்கையாகவே இதனை நான் காண்கிறேன். அதனால் இலங்கையில் இருந்து இஸ்ரேலுக்கு தொழிலுக்கு அனுப்பும் விடயத்தை அரசாங்கம் மீள் பரிசீலனை செய்ய வேண்டும்.

அத்துடன், தொழிலுக்கு செல்பவர்களுக்கு அங்கு இராணுவப் பயிற்சிகள் வழங்கப்படுவதன் மூலம் இந்த நாட்டில் வேறுவிடயங்களும் இடம்பெறக்கூடும். இஸ்ரேலில் பணி புரிந்துவந்த இலங்கையர்கள் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர். இது தொடர்பில் எமது கவலையைத் தெரிவித்துக்கொள்கிறோம். எதிர்காலத்தில் இவ்வாறான விடயங்கள் ஏற்பட்டால், அதனால் எமது நாட்டில் தேவையற்ற தூண்டல்கள் ஏற்படலாம். அதனால் அரபு நாடுகள் லட்சக்கணக்கானவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கிக்கொண்டிருப்பதைக் கண்டுகொள்ளாது இந்தச் சந்தர்ப்பத்தில் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறேன்." – என்றார்.

# போதை பொருள் விற்பனையில் ஈடுபட்ட பெண் வியாபாரி காத்தான்குடியில் கைது

(கனகராசா சரவணன் )

காததான்குடி பிரதேசத்தில் போதை பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த பிரபல பெண் வியாபாரி ஒருவரை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் கைது செய்தனர். அவரிடமிருந்து ஒரு கிராம் 400 மில்லிக்கிராம் போதை பொருளை மீட்டுள்ளனர் எனவும் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினருக்குக் கிடைத்த தகவல் ஒன்றிற்கமைய உதவி பொலிஸ் மா அதிபரின் ஆலோசனைப்படி, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் ஏ. எதிர்மன்னவின் வழிகாட்டலில், மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஷகி தலைமையிலான பொலிஸார் சம்பந்தப்பட்ட பெண்ணின் வீட்டை முற்றுகையிட்டனர்.

இதன்போது வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பிரபல பெண் போதை வியாபாரியை கைது செய்தமையுடன் அவரிடமிருந்து ஒரு கிராம் 400 மில்லிக்கிராம் போதை பொருளையும் மீட்டனர்.

அந்தப் பெண்ணை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர் எனவும் அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# நிலவும் சீரற்ற காலநிலையினால் சிறுவரைத் தாக்கும் வைரஸ்கள்!

சிறுவர்களுக்குக் காய்ச்சல், இருமல் மற்றும் சளி என்பன காணப்படுமாயின் அவர்களை பாடசாலை, முன்பள்ளி மற்றும் மேலதிக வகுப்புகளுக்கு அனுப்புவதைத் தவிர்க்குமாறு பெற்றோர்களிடம் சுகாதாரத்துறையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையுடன் பல வைரஸ்களின் கலவையாக இந்த நோய் நிலைமைகள் ஏற்படலாம் என ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சந்திம ஜீவந்தர குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த அறிகுறிகள் காணப்படும் சிறுவர்களுக்கு கட்டாயமாக முகக்கவசங்களை அணிவிக்க வேண்டுமென அவர் பெற்றோர்களை வலியுறுத்தியுள்ளார்.


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
“ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்.”
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PICKUP & DROP
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
VAN FOR RENT
Make Your Ride Better
A/C
CALL NOW
+94 773 776 882
+94 753 770 230

RUHBINS HOSPITAL (PVT) LTD.
NO. 160, POINT PEDRO ROAD, NELLIYADY, JAFFNA.

NOVEMBER 14
# WORLD DIABETES DAY

## DIABETES IS A SILENT KILLER

Approximately 463 M + From the World Population

Over 2 M Sri Lankans are Diabetes

Every 6 seconds One person dies due to Diabetes





Access to Diabetes Care

**WELLNESS PACKAGE**

- HBA1C
- Fasing/ Random Blood Sugar
- Total Cholesterol
- Creatinine & eGFR
- Blood Pressure
- BMI Assessment
- Consultation with Medical Officer
- Advice on Lifestyle Modification

Special Offer
**Rs. 5,500/-**
Offer valid till Dec 14th

Hotline:
+94772486642

உங்கள் அன்பிற்குரியவரை நீரிழிவு பரிசோதனை செய்துகொள்ள சொல்லுங்கள், அது அவர்களின் உயிரை பாதுகாக்கும்.

Ruhbins Hospital
No. 160, Pointpedro Road, Nelliyadi, Jaffna

# வடக்கு, கிழக்கு மாகாணங்களை சேர்ந்த 13 சிறுமிகள் மலேசியாவிற்குக் கடத்தல்!

## ஆள்கடத்தற்காரர்கள் தொடர்பில் விசாரணை

இலங்கை சிறுமிகள் மலேசியா ஊடாக வேறு நாடுகளுக்கு கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் ஆள்கடத்தல், கடத்தல் விசாரணை மற்றும் கடற்சார் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள் ளன.

இதுவரை முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் வடக்கு, கிழக்கு மாகாணங்களை சேர்ந்த 18 இற்கும் குறைந்த வயதுடைய சிறுமிகள் மலேசியாவிற்கு கடத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதற்காக சட்ட ரீதியான முறையில் கடவுச்சீட்டு பயன் படுத்தப்படுகின்றமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மலேசியாவில் போலி விமானப் பயணச்சீட்டை தயா ரித்து பிரான்ஸ் மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகளுக்கு



அவர்கள் கடத்தப்படுகின்றனர் என பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

இதுவரை 13 சிறுமிகள் இவ்வாறு மலேசியாவிற்கு அனுப் பப்பட்டுள்ளனர்.

இதனுடன் ஆள்கடத்தற்காரர்கள் தொடர்புபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.



# அம்பாறை கண் வைத்தியர் விடுதியில் சடலமாக மீட்பு!



(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை பொது வைத்தியசாலையில் கடமை புரியும் கண் வைத்தியர் டொக்டர் பிரசன்ன பண்டார ரத்நாயக நேற்று தமது விடுதி அறையில் சடலமாக மீட்கப்பட்டார்.

அவர் நேற்றுக் கடமை நேரத்திற்கு வைத்தியசாலைக்கு வரத் தாமதமானதால்,வைத்தியசாலையில் கடமை புரியும் தாதி உத்தியோஸ்தர்கள் தொலைபேசி மூலம் வைத்தியரை தொடர்பு கொள்ள மேற்கொண்ட முயற்சி தோல்வியடையவே, அவர் தங்கியிருந்த தனியார் விடுதிக்குச் சென்று விடுதி முகாமையாளரின் உதவியுடன் கதவை உடைத்து உட்சென்று பார்த்த போது வைத்தியர் உணர்வின்றிய நிலையில் காணப்பட்டுள்ளார்.

பின்னர் வைத்தியரை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று பரிசோதிக்கையில் அவரது உயிர் பிரிந்து பல மணித்தியாலங்கள் கடந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

உயிரிழந்த குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்த வைத்தியரின் உடலம் அம்பாறை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பாக அம்பாறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# எட்டு மாதங்களின் பின் ஸ்ரீரங்காவுக்குப் பிணை

வவுனியா-செட்டிகுளம் பகுதியில் இடம்பெற்ற விபத்து தொடர்பான வழக்கின் சாட்சி ஒருவரை அச்சுறுத்திய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.ஸ்ரீரங்காவுக்கு, வவுனியா மேல் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.



கடந்த மார்ச் மாதம் கொழும்பு வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த நிலையில்,

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட அவர் கடந்த எட்டு மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், இந்த வழக்கு நேற்று முன்தினம் வவுனியா மேல் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே அவருக்கு பிணை வழங்குவதற்கு வவுனியா மேல் நீதிமன்றம் அனுமதி அளித்தது.

# இத்தாவிலில் ஓட்டோ மோதி படுகாயமுற்ற யுவதி மரணம்



ஏ-9 வீதி இத்தாவில் பகுதியில் ஓட்டோ மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த யுவதி ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

செல்வபுரம், பளையை சேர்ந்த குணாளன் மதுஜா (வயது-19) என்ற யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தையல் வேலை பழகுவதற்கு புதுக்காட்டுப் பகுதிக்கு சென்று வரும் இந்த யுவதி வழக்கம் போன்று கடந்த 22ஆம் திகதி மாலை 04.45 மணியளவில் பஸ்ஸில் இத்தாவில் பகுதியில் வந்து இறங்கி, வீதியின் வலது பக்கமாக நடந்து சென்று கொண்டிருந்த போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த ஓட்டோ வீதியின் மத்திய கோட்டைத் தாண்டி வீதியின் வலது பக்கமாக நடந்து சென்ற யுவதியை பின்னால் மோதி விபத்துக்குள்ளாக்கியதில் அவர் படுகாயமடைந்தார்.

உடனடியாகவே பளை வைத்தியசாலைக்கு கொண்டு சென்று மேலதிக சிகிச்சைக்காக 5.30 மணியளவில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டிருந்த நிலையில் அன்றைய தினமே இரவு 8.45 மணியளவில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அவர் மாற்றப்பட்டிருந்தார்.

அங்கு தொடர்ந்தும் சிகிச்சை வழங்கப்பட்டு வந்த நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

இந்த இறப்பு தொடர்பில் யாழ் போதனா வைத்தியசாலையின் திடீர் மரணவிசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டு பிரதேச பரிசோதனைக்கு உத்தரவிட்டிருந்தார்.

இதன்பின் உடல் குடும்பத்தாரிடம் கையளிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில் பளை பொலிசர் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# இரு வன்னி இளைஞர்கள் கட்டுநாயக்காவில் கைது



(ரஸீன் ரஸ்மின்)

சட்டவிரோதமான முறையில் வெளிநாடு செல்ல முயற்சித்த இரு இளைஞர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டசந்தேகநபர்களானஇரண்டுஇளைஞர்களும் 25 மற்றும் 27 வயதுடையவர்கள் எனவும், இவர்கள் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கு செல்ல முயன்ற இரு இளைஞர்களே இவ்வாறு விமான நிலைய குடிவரவு , குடியகல்வு கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

துருக்கி ஏர்லைன்ஸ்க்கு சொந்தமான டி.கே 731 இலக்கம் கொண்ட விமானம் மூலம் பயணிப்பதற்கு இந்த இளைஞர்கள் விமான நிலையத்திற்கு வருகை தந்துள்ளனர்.

கொழும்பு - பொரளை பகுதியைச் சேர்ந்த தரகர் ஒருவரால் சகல ஆவணங்களுடன் தயாரிக்கப்பட்ட விசாக்களைப் பயன்படுத்தி இருவரும் சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயற்சித்தனர் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பெயரில் ஒரு கட்டமைப்பை ஏற்படுத்தியது. இப்போது யுத்தம் முடிந்ததும் 'வழித் தேங்காயைத் தெருப் பிள்ளையாருக்கு உடைத்த மாதிரி' பொதுமக்களிடம் இருந்து தான் பிடுங்கிய காணிகளுடன் கூடிய கட்டமைப்பைக் காதும் காதும் வைத்தால் போல ஒரு தொகைப் பணத்தைக் கறந்து கொண்டு, மூன்றாம் தரப்புக்கு ஐம்பது வருட குத்தகைக்கு ஒப்பந்தம் மூலம் வழங்கி விட்டது அரசு என்று செய்தி வெளியானது.

கேள்விப் பத்திரம் கோரப்படாமல், யாருக்கும் அறிவிக்காமல், சத்தம் சந்தடியின்றி, காதும் காதும் வைத்தாற் போல, காரியம் முன்நகர்த்தப்பட்டிருப்பதால், இடையில் பெருந்தொகை கைமாறியிருக்கும் என்று பல தரப்புகளுக்கும் சந்தேகம்.

மக்களிடமிருந்து பலாத்காரமாய்ப் பிடுங்கி, ஆட்டையைப் போட்ட இந்தக் காணிகள் இன்னும் சட்டபூர்வமாக அரசினால் சுவீகரிக்கப்படவில்லை. அதற்கான சட்ட நடவடிக்கைகள் இன்னும் பூர்த்தியாகவில்லை. இனியும் பூர்த்தியாகுமோ தெரியவில்லை. அதில் சில, பல சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன என்கின்றன விடயம் அறிந்த வட்டாரங்கள்.

அதற்கிடையில், கட்டடம் கை மாறி விட்டது என்கின்றன சில தரப்புகள். இல்லையில்லை, ஒப்பந்தம்தான் பூர்த்தியாகியிருக்கின்றது. இன்னும் சொத்தின் உடைமை கை மாறவில்லை என்கின்றன வேறு தரப்புகள். ஒரே குழப்பம்தான் நீடிப்பு.

ஆகையினால், இதுகுறித்து அறிய எமது அலுவலகச் செய்தியாளர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் விவரம் கேட்டார்.

கீரிமலையில் அந்தக் கட்டடமும், அது அமைந்துள்ள – மக்களிடமிருந்து பிடுங்கப்பட்ட – காணிகளும் நகர அபிவிருத்தி சபையின் கீழதான் இருந்தன.

அந்த ஜனாதிபதி மாளிகை தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கும் இண்டி பத்மநாதன் என்பவருக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தப் பிரதியை வழங்க நகர அபிவிருத்தி அதிகார சபை மறுப்புத் தெரிவிக்கின்றது.

2023 ஒக்டோபர் மாதம் 16ஆம் திகதியன்று கொழும்பு தலைமை அலுவலகத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கும் இண்டி பத்மநாதன் என்பவருக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்த நிகழ்வு சட்ட ரீதியிலானதா எனத் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் விண்ணப்பித்து கேட்கப்பட்ட வினாவிற்கு ஆம் என நகர அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்ப்பாணம் அலுவலகம் பதிலளித்துள்ளது.

இதேநேரம் இவ்வாறு இரு தரப்புகளுக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரதி ஒன்றை வழங்குமாறு விண்ணப்பித்த சமயம், புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தொடர்புடைய மற்றத் தரப்பின் ஒப்புதலின்றி அதனை வழங்க முடியாதுள்ளது எனப் பதிலளிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பதிலுக்கு எதிராக திணைக்களத் தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்ட மேன் முறையீட்டு விண்ணப்பத்திற்கும் தகவல் அறியும் சட்டத்தின் 2ஆம் பிரிவின் 5ஆம் அத்தியாயத்தின் கீழ் அதன வழங்க முடியாது என்றே மறுதலித்துள்ளனர்.

இதன் காரணமாக ஒப்பந்தத்தை கோரும் விடயம் எமது செய்தியாளரால் தகவல் அறியும் ஆணைக்குழுவின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படுகின்றது.

நமது செய்தியாளரும் 'விடாக்கண்டன், கொடாக்கண்டன்'தான். நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் இது தொடர்பில் ஒரு கரை காணாமல் அவர் அடங்கமாட்டார். பார்ப்போம் என்ன நடக்கின்றது என்பதை...!

## வாள்வெட்டுத் தாக்குதலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

ஒழுங்கை, பருத்தித்துறையைச் சேர்ந்த ஜெயச்சந்திரன் டிலக்சன் (வயது 23) என்ற இளைஞரே படுகாயமடைந்துள்ளார்.

வீதியால் சென்ற இளைஞரை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் வாளால் வெட்டியுள்ளனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதில் படுகாயமடைந்த இளைஞர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ரஞ்சித் பண்டாரவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இதன்படி, குழுவின் மற்றுமொரு உறுப்பினர் தலைமையில் கிரிக்கெட் நிறுவனம் மீதான விசாரணைகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், ரஞ்சித் பண்டார மற்றும் குழுவின் ஏனைய உறுப்பினர்களுடன் கலந்துரையாடிய பின்னரே இறுதித் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் என்று கட்சித் தலைவர்களுக்குச் சபாநாயகர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் சபை அதிகாரிகளிடம் அண்மையில் கோப் குழு நடத்திய விசாரணைகளின் போதே கோப் குழுவின் தலைவர் ரஞ்சித் பண்டாரவின் மகன், குறித்த விசாரணை அறையில் இருந்தமை பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது.

இதன் காரணமாக ரஞ்சித் பண்டாரவுக்கு எதிராக எதிர்ப்புகள் வலுப்பெற்றதுடன், அவரிடம் இருந்து கோப் தலைமை பதவி பறிக்கப்பட வேண்டும் எனவும் அழுத்தங்கள் அதிகரித்துள்ளன.

இவ்வாறான பின்புலத்திலேயே கிரிக்கெட் சபை தொடர்பிலான விசாரணைகளில் இருந்து அவரை நீக்க வேண்டுமென கட்சித் தலைவர்கள் ஏகமானதான முடிவை எடுத்துள்ளனர்.

## தமிழரின் உணர்வெழுச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நாடாளுமன்றத்தில் அவர் நேற்று உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"போரில் உயிரிழந்தவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு மதிய உணவு வழங்கியதற்காக ஜனநாயகப் போராளிகளின் கட்சியின் உப தலைவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இன்று (நேற்று) கைது செய்யப்பட்டார்.

அரசும், பொலிஸாரும், படையினரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தினூடாக எமது இனத்தை முடக்கப் பார்க்கின்றார்கள். எமது இனத்துக்காக – இனத்தின் விடுதலைக்காகப் போராடிய மாவீரர்களின் துயிலும் இல்லங்களைத் தரைமட்டமாக்க முயலும் அரச தரப்பினரும், இனவாதிகளும் எம்மவர்களின் கல்லறைகளைப் பார்த்து இன்றளவிலும் பயப்படுவது ஏன்? தமிழர்களின் உணர்வெழுச்சியை அவர்களால் அடக்க முடியாது.

மாவீரர்களின் சாபத்தைக் கோட்டாபய அனுபவித்தது போல் தற்போதைய ஜனாதிபதி ரணில் அனுபவிக்கும் காலம் வெகுதொலைவில் இல்லை.

இந்தக் கார்த்திகை மாதம் எம்மவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் மாதமாகும். அஞ்சலி செலுத்துவதற்குக் கூட இந்த நாட்டில் எமது இனத்துக்கு உரிமை இல்லையா?" – என்று கேள்வி எழுப்பினார்.

## ஜனநாயகப் போராளிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தடை உத்தரவு பெறப்பட்டு தடுத்து நிறுத்தப்பட்டது.

இந்த நிகழ்வு ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உப தலைவர் என். நகுலேஸ் மற்றும் மாவட்ட ஊடகப் பேச்சாளர் சாந்தன் ஆகியோரின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நிகழ்வு ஆரம்பிக்கப்பட இருந்த நிலையில் அவ்விடம் வந்த வெல்லாவெளி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உப தலைவர் என்.நகுலேஸை அழைத்து களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றத்தினூடாகப் பெறப்பட்ட தடையுத்தரவை வழங்கி இந்நிகழ்வை உடன் நிறுத்துமாறு தெரிவித்து கைது செய்தனர்.

இந்த வழக்கு களுவாஞ்சிக்குடி நீதிமன்றத்தில் எதிர்வரும் டிசம்பர் மாதம் 7ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## அறிவுபூர்வமாய் நகர்வோம்

தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளை நமது தமிழ் மக்கள் மனதில் ஏத்திப் போற்றித் துதிக்கும் மாவீரர் தினம் நாளை.

இந்த நாள்களில் நினைவேந்தலை முன்னெடுக்கப் பலத்த சட்டப் போராட்டங்களை நாம் நடத்த வேண்டி உள்ளது.

நினைவேந்தல் என்பது உணர்வுபூர்வமான விடயம். உணர்வெழுச்சியைத் தூண்டும் விவகாரம்.

ஆயினும், தமிழ் மக்களுக்கு அந்த உரித்தை - உரிமையை - விட்டுக் கொடுத்து விடக்கூடாது என்று பேரினவாதம் கங்கணம் கட்டி நிற்கும் நிலையில், அதை எதிர்கொண்டபடி அந்த உரித்தை நிலைநாட்ட நாம் போராடிக் கொண்டிருக்கின்றோம்.

போராட்டத்துக்கு மத்தியில்தான் நினைவேந்தல் செய்ய முடியும் என்ற யதார்த்தத்திற்கு இடையில் இந்த விவகாரத்தை நாம் அணுக வேண்டியிருப்பதால், அந்த யதார்த்தத்தை உணர்ந்து, உணர்வுநிலைக்கு அப்பால் சற்று அறிவு நிலையிலும் இந்தச் சூழலை நாம் அணுகுவது தவிர்க்க முடியாததாகின்றது.

இந்த நினைவேந்தலைத் தடை செய்வதற்கான விண்ணப்பங்களுடன் இலங்கை ஆட்சி பீடத்தின் ஏவல் படையான பொலிஸ்துறை நீதிமன்றங்கள் தோறும் அலைந்து கொண்டிருக்கின்றது.

வடக்கு - கிழக்கில் உள்ள கீழ்நிலை நீதிமன்றங்கள் பலவும் இந்த விடயத்தில் யதார்த்தப் புறச்சூழலை உணர்ந்து, மக்களின் நினைவேந்தும் உரிமையை பொலிஸார் தட்டிப்பறிக்காமல், பாதுகாப்பதற்கான வசதி வாய்ப்புகளை சட்டத்தினால் இயன்ற அளவில் ஏற்படுத்திக் கொடுப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றன என்பது கண்கூடு.

இந்த விடயங்களை ஒட்டி அண்மைய நாள்களில் கீழ்நிலை நீதிமன்றங்களின் நீதிவான்கள் துணிச்சலுடன் வழங்கிய கட்டளைகள், உத்தரவுகள் இதற்குச் சான்று.

பொது அமைதிக்கும் பாதுகாப்புக்கும் செயற்பாட்டுக்கும் பங்கம், நினைவேந்தல் நிகழ்விடங்களில் அமைக்கப்படும் பந்தல்களினால் பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்ற பொலிஸாரின் கப்ஸா காரணங்களை எல்லாம் நீதிமன்றங்கள் தூக்கிக் கடாசிப் புறமொதுக்கி தன் உத்தரவுகள் மூலம் நீதிமன்றத்தின் உயர்ந்த மேன்மை தன்மைகளை, நடுநிலையான - துணிச்சலான - தனித்துவத்தை வெளிப்படுத்தி வருகின்றன.

இத்தகைய உயர்ந்த உத்தரவுகள், கட்டளைகள் போன்றவற்றின் தாற்பரியத்தை நாம் உணர்ந்து செயற்பட வேண்டும்.

நீதிமன்றத்துக்குப் போய் தடை உத்தரவு வேண்டாமலேயே இந்த நினைவேந்தல்களைத் தடுக்கக்கூடிய சட்ட ஓட்டைகளும் வாய்ப்புகளும் பொலிஸாருக்குச் சாதகமாகவே தாராளமாக உண்டு. அதனைப் புரிந்து கொள்ளாமல் - விடயங்களை அறிவு நிலையில் அணுகாமல் - நினைவேந்தும் உணர்வெழுச்சியில் நாம் போட்டடித்துக் குழப்பி விடக்கூடாது.

குறிப்பாக நினைவேந்தல் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வோர் இதில் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும். இல்லையேல் பின்னர் நாம்தான் கவலைப்பட வேண்டி நேரும். நினைவேந்தும் எமது உரிமையை நாமே குழப்பி விடக்கூடாது.

இந்த நினைவேந்தல் நிகழ்வுகளில் விடுதலைப் புலிகள் அமைப்பின் சின்னங்கள், சீருடைகளுடன் போராளிகளின் படங்களைக் காட்சிப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளைக் காரணம் காட்டி நினைவேந்தல் நிகழ்வுகளை தடுக்கவும், சம்பந்தப்பட்டோரைப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யவும் பொலிஸாருக்கு இலங்கைச் சட்டங்களின் கீழ் உரித்து உண்டு.

இந்த விடயங்களை நாம் முன்னெச்சரிக்கையுடனும் அவதானத்துடனும் அணுகா விட்டால் பின்னர் வருந்த நேரிடும்.

சாதாரண சட்ட நடவடிக்கைகள் மூலம் நினைவேந்தலைத் தடுக்க முடியாத இயலாமையில் சினந்து கிடக்கும் தென்னிலங்கை ஆட்சிப்பீடத்தின் ஏவல்படையான பொலிஸ், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஏவுவதன் மூலம் நினைவேந்தல் நிகழ்வுகளைக் குழப்பி, நிகழ்வு ஏற்பாட்டாளர்களைக் கைது செய்து, தன் கைவரிசையைக் காட்டலாம். அப்படிப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதானால் பிணையும் இல்லை, விளக்கமறியல் அல்லது தடுப்புக்காவலில் இருந்து மீட்சியும் கிடையாது. ஆகையினால் சாவினை தழுவிய எமது இரத்த உறவுகளுக்காய் நினைவேந்துவோம் - அறிவு பூர்வமான முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளுடன்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வண்டும்."
- தியோடர் ரூஸ்வெல்ற்
(அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி)





# நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் 2 லட்சத்துக்கு மேற்பட்டோர் பாதிப்பு

நாட்டில் பதிவான பலத்த மழைவீழ்ச்சியால் ஏற்பட்ட அனர்த்தங்களினால் 2 லட்சத்து 17 ஆயிரத்து 900 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இவர்களில் 51,572 குடும்பங்கள் அடங்குவதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தை விடவும் இவ்வருடம் வெள்ளம் மற்றும் மண்சரிவுகளினால் அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாகவும் அனர்த்தங்களினால் 51 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 103 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் குறிப்பிட்டுள்ளார்.

சுமார் 10 ஆயிரத்து 100 வீடுகளுக்கு சேதமேற்பட்டுள்ளமையுடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கான வினைத்திறனுடன் கூடிய சேவைகளை வழங்குவதற்காக 181 பாதுகாப்பு முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, மண்சரிவு ஏற்படுவதற்கான காரணங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவை தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கமைய, தேசிய கட்டட ஆய்வு நிறுவகத்தால் சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன எனவும் மண்சரிவு ஏற்படும் நிலைமையைத் தவிர்ப்பதற்கான அடுத்த வருடத்திற்கான வேலைத்திட்டத்திற்காக 10 பில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் குறிப்பிட்டார்.

மண்சரிவினால் கடந்த இரண்டு மாதங்களில் 10 பேர் உயிரிழந்துள்ளனர். இவற்றில் 5 உயிரிழப்புகள் இரத்தினபுரியில் பதிவாகின எனத் தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது. ஏனையவை கண்டி, காலி, பதுளை மாவட்டங்களில் பதிவாகியுள்ளன.

இந்த இரண்டு மாத காலப்பகுதிக்குள் மண்சரிவு அபாயம் நிலவும் 1,559 இடங்களை ஆய்வு செய்ததாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

இந்த ஆய்வின்போது மண்சரிவு ஏற்பட்ட 131 இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில் 768 மண்சரிவுகளும், 88 பாறைகள் வீழ்ந்த சம்பவங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

நிலம் தாழிறங்கல் உள்ளிட்ட ஏனைய 159 சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

இதேவேளை, 14 மாவட்டங்களில் 14,200 குடும்பங்கள் மண்சரிவு அபாயம் நிலவும் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றன எனப் புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

அவற்றில் சுமார் 5,000 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களில் மீள்குடியேற்றப்பட்டு வருகின்றன எனப் பணியகத்தின் சிரேஷ்ட புவிச்சரிதவியலாளர் லக்சிறி இந்திரதிலக குறிப்பிட்டுள்ளார்.

# அமெரிக்காவில் இருந்து போதைவஸ்து கடத்தல்!

## கொழும்பில் ஐவர் கைது



அமெரிக்காவில் இருந்து விமானம் ஊடாக குஷ் போதைப்பொருள் கொண்டுவரப்பட்டமையுடன் தொடர்புடைய ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாளிகாவத்தை, அம்பலாங்கொடை, வெல்லம்பிட்டிய மற்றும் தெமட்டகொட பகுதிகளை சேர்ந்த 27, 36, 41, 47 மற்றும் 48 வயதான ஐவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 20 ஆம் திகதி அமெரிக்காவிலிருந்து விமானம் ஊடாக நாட்டிற்கு கொண்டுவரப்பட்ட பொதியொன்றில் போதைப்பொருள் காணப்படுவதாக சுங்க போதைப்பொருள் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அந்த பொதி கம்பஹாவை சேர்ந்த பெண் ஒருவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

அதில் 05 கிலோ 61 கிராம் குஷ் போதைப்பொருளும் 511 கிராம் கொக்கெய்னும் கண்டுபிடிக்கப்பட்டன.

பொதியை பெற்றுக்கொள்ள வந்தவர் கைது செய்யப்பட்டு, அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளையடுத்து மேலும் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தலுக்காக பயன்படுத்தப்பட்ட கப் ரக வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள், 07 நாள்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# ரணில் சொல்வார் செய்ய மாட்டார்!

## சபையில் மனோ கணேசன் எம்.பி. கருத்து



**கொழும்பு, நவ.26**

**“ஜனாதிபதி பெருந்தோட்ட அபிவிருத்திக்காக ஒதுக்கியுள்ள நானூறு கோடி ரூபாவை பெற்றுக்கொள்ள விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனெனில் ரணில் விக்கிரமசிங்க சொல்வார் செய்ய மாட்டார்.”**

**- இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டத்தில் நீர்வழங்கல், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

”வரவு - செலவுத் திட்டத்தில் பெருந்தோட்ட அபிவிருத்திக்காக நானூறு கோடி ரூபா ஒதுக்கி இருப்பதாகவும் காணி உரிமை வழங்குவதாகவும்ம் ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றமையை வரவேற்கிறோம்.

ஆனால், அதனை எப்படியாவது அவரிடமிருந்து பிடுங்கி எடுக்க அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனெனில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் எமக்க நன்கு தெரியும். சொல்லுவார். ஆனால் செய்யமாட்டார். வரும் என்பார் ஆனால் அது வராது.

நாங்கள் இங்கு குறை கூறினால் அது உங்களை அல்ல. ஜனாதிபதியைத்தான். நாங்கள் முரண்பட்டுக் கொள்ளத் தேவையில்லை. நாங்கள் வெளியில் இருந்து அழுத்தம் கொடுக்கிறோம். நீங்கள் உள்ளே இருந்து அழுத்தம் கொடுங்கள்.

அத்துடன், பெருந்தோட்ட மக்களுக்கு 10 பேர்ச் காணி வழங்குவதாக ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார். நாங்கள் 7 பேர்ச் காணி வழங்கினோம். நீங்கள் 3 பேர்ச் அதிகரித்து 10 பேர்ச் வழங்குவதாக தெரிவித்திருக்கிறீர்கள். அதனை நாங்கள் வரவேற்கிறோம்.

அதேபோன்று இந்திய நிதி அமைச்சர் 10 ஆயிரம் வீடுகளை வழங்குவதாக தெரிவித்திருந்தார். அந்த 10 ஆயிரம் என்பது 2002 இல் நாங்கள் இந்திய அரசாங்த்திடம் கேட்டுப்பெற்ற வீடுகளாகும் என்றே நினைக்கிறோம்.

அதேபோன்று தோட்ட தொழிலாளர்களை நில உரிமையாளர்களாக்குவோம் என்ற வாக்குறுதியை சஜித் பிரேமதாஸவின் ஜனாதிபதி கொள்கை விஞ்ஞாபனத்தில் வழங்கி இருக்கிறோம்.

அதேபோன்று, நாடாளுமன்றத்தில் நாங்கள் கொண்டு வந்த ஒருநாள் விவாதத்தின் போதும் இந்திய வம்சாவளி தோட்ட மக்களுக்கு காணி உரித்துரிமை வழங்க வேண்டும் என்ற கோஷத்தை ஆளும், எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் அனைவரும் தெரிவித்தார்கள்.

அது எமக்கு கிடைத்த வெற்றியாகும். எங்களுக்கு யாருடைய அனுதாபமும் தேவையில்லை, நீதியே தேவை என அன்று தெரிவித்தோம். அந்தக் கோரிக்கையை அமைச்சரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அத்துடன், 2015 இல் நல்லாட்சி அரசாங்கத்துக்குள் இருந்து பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டோம். அதில் குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் 6 பிரதேச சபைகளை உருவாக்க நடவடிக்கை எடுத்தோம். என்றாலும் எமது அரசாங்கம் தோல்வியுற்றதால் தற்போது அந்த நடவடிக்கை பூரணப்படுத்தப்படாமல் இருக்கிறது.

அதனைச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். அதேபோன்று தோட்டத் தொழிலாளர்களுக்கு தனி வீடு கட்டவேண்டும் என்ற கோரிக்கையையும் நாங்கள்தான் ஆரம்பித்தோம்.

தமிழ் கிராமங்களை அங்கு உருவாக்கினோம். மலையக மக்களுக்கான அதிகாரசபையை ஏற்படுத்தினோம். ஆனால் அந்த அதிகாரசபைகள் எதுவும் இல்லை. இவ்வாறு பல வேலைத்திட்டங்களை செய்தோம். அந்த வேலைத் திட்டங்கள் அனைத்தையும் சபையில் சமர்ப்பிக்கிறேன்.” - என்றார்.

# மழையால் மின்சார சபைக்கு லாபம் கிடைத்தால் அதன் பயன் மக்களுக்கு

## அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவிப்பு

மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்துள்ள பகுதிகளில் நிலவும் தொடர்ச்சியான மழை காரணமாக டிசம்பர் மாதத்தில் மின்சார சபைக்கு செயற்பாட்டு இலாபம் கிடைக்குமாயின் அதன் பலன் ஏப்ரல் மாதத்தில் நுகர்வோருக்கு வழங்கப்படும் என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

மின்சார சபை தொடர்ந்தும் 12 பில்லியன் ரூபா நட்டத்தில் உள்ளதாகவும் தற்போதைய மழைவீச்சியின் மூலம் மின்சார சபையின் டிசம்பர் மாத நிதி அறிக்கையின் பிரகாரம் ஓரளவு செயற்பாட்டு இலாபம் கிடைக்கும் என நம்புவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் கஞ்சன விஜேசேகர -

மின்சார சபையின் மறுசீரமைப்பு என்பது நாட்டில் நீண்டகாலமாக கருத்தாடலுக்குட்பட்ட விடயமாகும். மறுசீரமைப்பு தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைக்கு கடந்த திங்கட்கிழமை அமைச்சரவை அங்கீகாரம் அளித்தது டன் புதிய மின்சார சட்ட மூலத்திற்கும் அங்கீகாரம் வழங்கியது.

இதன்படி, எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் புதிய மின்சார சட்டத்தை வர்த்தமானியில் வெளியிட்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். அடுத்த ஆண்டு ஜனவரியில் புதிய சட்டம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.



# தெல். யூனியன் கல்லூரியுடனான கிரிக்கெட்
# யாழ். மத்திய கல்லூரி இன்னிங்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி இன்னிங்ஸ் மற்றும் 83 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முதலில் களத்தடுப்பல் ஈடுபடத் தீர்மானித்தது,

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி அணி, 15.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 13 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி அணி 35 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 108 ஓட்டங்களை பெற்றது.

பின்னர் 2ஆவது இன்னிங்ஸை ஆடிய யூனியன் கல்லூரி அணி ,12.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 12 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இதன் அடிப்படையில் மத்தியகல்லூரி, இன்னிங்ஸ் மற்றும் 83 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

மத்திய கல்லூரி சார்பாக சில் வேஸ்ரன் சிறப்பாக பந்துவீசி முதல் இனிங்ஸில் 7 விக்கெட்டுக்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களையும் சாய்த்தார்.

# பம்பலப்பிட்டி இந்து மாணவன் அசாத்திய சாதனை

## 9.4 ஓவர்கள் பந்துவீச்சு | ஓட்டம் எதுவும் கொடுக்கவில்லை

## 8 விக்கெட்டுக்கள் சாய்ப்பு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட டிவிஷன் – 2 கடினப்பந்து கிரிக்கெட் போட்டி நடைபெற்றது.

இதில் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரிக்கும், பத்தரமுல்ல ஜயவர்த்தன மத்திய கல்லூரிக்குமிடையிலான கிரிக்கெட் போட்டி முல்லேரியா எதிரிவீர சரத்சந்திர விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

முதல் முதலில் துடுப்பெடுத்தாடிய பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி 126 ஓட்டங்களுக்கு 9 விக்கட்டுக்களை இழந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பத்தரமுல்ல ஜயவர்த்தன அணி 28 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் சகல விக்கட்டுக்களையும் இழந்தது.

பின்னர் இப்போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தாலும், இந்துக் கல்லூரி மாணவன் செல்வசேகரன் ரிஷியுதன் 9.4 ஓவர்கள் பந்து வீசி ஓட்டம் எதுவும் கொடுக்காமல் 8 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி பெரும் சாதனையொன்றை நிலைநாட்டியுள்ளார்.









# முதல்தர கிரிக்கெட்டில் களமிறங்கிய மன்னார் வீராங்கனை கஜந்தினி

## அதே மாவட்டத்தைச் சேர்ந்த மற்றொருவரும் தெரிவு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கையில் இடம்பெறும் பெண்களுக்கான முதல்தர கழகங்களுக்கான கடினப்பந்து கிரிக்கெட் தொடரில், மன்னாரைச் சேர்ந்த கஜந்தினி என்ற வீராங்கனை பங்கேற்றுள்ளார்.

இவர், கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற போட்டியில் இலங்கையின் முன்னணிக் கழகமான எஸ்.எஸ்.சி.யின் பதினொருவர் அணிக்குள் களமிறக்கப்பட்டார்.

இந்தப் போட்டியில் இவர் 4 ஓவர்கள் பந்துவீசி 15 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

இப்போட்டியில் பங்கேற்றதன் மூலம் மன்னார் மாவட்டம் சார்பாக முதல்தர கழகம் ஒன்றில் விளையாடிய முதல் கிரிக்கெட் வீராங்கனை என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

அதேவேளை, எஸ்.எஸ்.சி. அணியின் முதல் 15 வீராங்கனைகளுக்குள் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மற்றுமொரு வீராங்கனையான சலோமியும் உள்வாங்கப்பட்டுள்ளார்.

இவர்கள் இருவரும் பேசாலை பற்றிமா பாடசாலையைச் சேர்ந்த வீராங்கனைகள் என்பது குறிப்பிடத்தக்கது.



# சர்வதேச கராத்தேயில் புத்தளம் மாணவர்கள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

புத்தளம், கல்பிட்டியைச் சேர்ந்த இரு மாணவர்கள் சர்வதேச கராத்தே போட்டியில் பங்கேற்கவுள்ளனர்.

இந்தியாவின் விசாகப்பட்டிணத்தில் சர்வதேச கராத்தே போட்டி நடைபெறவுள்ளது.

இதில், புத்தளம், கல்பிட்டி நிர்மலா மாதா தேசிய கல்லூரியில் தரம் 8இல் கல்வி கற்கும் மெனுஷா செவ்சிதா மற்றும் ஆஷாரா விஷ்மி ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.




# ஒன்றரைக் கிலோ கேரள கஞ்சாவுடன் புதுக்குடியிருப்பில் இளைஞன் கைது



புதுக்குடியிருப்பு இரணைப் பாலை பகுதியில் இளைஞன் ஒருவரிட மிருந்து நேற்று அதிகாலை ஒரு கிலோ 570கிராம் கஞ்சாவைத் தாங்கள் மீட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் இரணைப்பாலை பகுதியிலுள்ள வீட்டிற்கு சென்ற பொலிஸார் வீட்டினுள் சோதனை நடவடிக்கையை மேற்கொண்ட போது அவரது வீட்டு அறையில் பொதி செய்யப்பட்ட வகையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு கிலோ 570கிராம் கேரளக் கஞ்சாவை புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹெரத் தலைமையிலான பொலிஸார் மீட்டுள்ளனர்.

இரணைப்பாலை பகுதியை சேர்ந்த 27 வயதுடைய இளைஞனை கைது செய்தமையுடன் இவருக்கு எவ்வாறு கஞ்சா கிடைக்கப்பெற்றது, எங்கிருந்து கொண்டுவந்தார் போன்ற விடயங்கள் தொடர்பில் விசாரணைகளை புதுக் குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதிமன்றில் அவரை முற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# பேராசிரியர்களாக மூவர் பதவி உயர்வு!







யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தாவரவியல் துறைத் தலைவர் உட்பட சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூவர் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

விஞ்ஞான பீடத்தின் தாவரவியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஈ.சி. ஜெயசீலன், கணிதவியலும், புள்ளிவிவரவியலும் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே.கண்ணன் மற்றும் கலைப் பீடத்தின் கல்வியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி (திருமதி) ஜே.இராசநாயகம் ஆகியோரைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை நேற்று ஒப்புதல் வழங்கியது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று சனிக்கிழமை காலை, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமையத் திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் இந்தப் பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் படி, தாவரவியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஈ.சி. ஜெயசீலன் தாவரவியலில் பேராசிரியராகவும், கணிதவியலும் புள்ளிவிவரவியலும் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே.கண்ணன் கணிதவியலில் பேராசிரியராகவும், கல்வியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி (திருமதி) ஜே.இராசநாயகம் கல்வியியலில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 26.11.2023

## மேஷம்

இன்று மந்தமான நாளாக இருந்த போதிலும் யதார்த்தமான நடைமுறையை பின்பற்றினால் உங்கள் இலக்குகளை அடையலாம். சோர்வை விரட்டியடிப்பதன் மூலம் உங்களை நீங்கள் மகிழ்ச்சியாக வைத்திருக்கலாம்

பணிச்சுமை அதிகமாகக் காணப்படும். சவாலான சூழ்நிலைகளை சமாளிக்க வேண்டியிருக்கும்.

தம்பதிக்குள் சலசலப்புகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொறுமை இழந்து காணப்படுவீர்கள். அதனால் நல்லுறவு பாதிக்கப்படும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்காது. மருத்துவச் செலவுகள் தவிர்க்க முடியாதது.

இன்று நீங்கள் தலைவலியால் அவதிப்படலாம். ரிலாக்ஸ்டாக இருப்பது நல்லது.

## ரிஷபம்

இன்று இழப்புகள் ஏற்படலாம். எனவே பெரிய அளவில் சிந்திப்பதோ அல்லது பெரிய முடிவுகளை எடுப்பதோ கூடாது. பொறுமையும் உறுதியும் கடைபிடிக்க வேண்டிய நாள்.

நேர்மறையான எண்ணத்துடனும் ரிலாக்ஸ் டாகவும் வேலை செய்ய வேண்டும். இல்லையெனில் நீங்கள் செய்யும் வேலையில் உங்களுக்கு திருப்தி கிடைக்காது.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. இன்று நீங்கள் உணர்ச்சிகரமாக செயல்படுவீர்கள். திருமணம் பற்றிய முடிவெடுப்பதற்கு இது உகந்த நாள் அல்ல.

இன்று பணப் பற்றாக்குறை காணப்படும். என்றாலும் இருக்கும் பணத்தில் சேமிக்க முயற்சி செய்ய வேண்டியது அவசியம்.

## மிதுனம்

உங்கள் ஆசைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு உங்கள் சுய வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும். உங்கள் வளர்ச்சிக்கான வாய்ப்பு இன்று காணப்படுகின்றது.

இன்று வேலை பளு அதிகமாகக் காணப்படும். அதை சரிகட்ட முறையாக திட்டமிட்டு பணிகளை செய்ய வேண்டியது அவசியம்.

உங்களுக்கு பிரியமானவர் இன்று குழப்பத்தில் இருப்பதாக உணர்வீர்கள். அதனால் உறவில் கருத்து வேறுபாடும் பிரிவினையும் காணப்படும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இல்லை. இழப்புகளைத் தவிர்க்க கட்டுப்பாட்டுடன் பணத்தை நிர்வகிக்க வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். குறித்த நேரத்தில் உணவு அருந்துவதன் மூலம் ஜீரணக் கோளாறுகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்.

## கடகம்

இன்று எந்தவொரு செயலையும் கவனமாகச் செய்ய வேண்டும். இன்று லாபம் ஏற்படலாம் அல்லது இழப்பும் ஏற்படலாம்.

இன்று சாதகமான சூழ்நிலையை உருவாக்கிக் கொள்வீர்கள். உங்களது தீர்மானமான முயற்சி மூலம் உங்களுக்கு அடுத்த நிலைக்கான பதவி உயர்வு சாத்தியமாகும்.

இன்று உங்கள் பிரியமானவருடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். இன்று திருமணம் செய்து கொள்வதறகான திட்டங்களை வகுப்பதற்கு உகந்த நாள்.

இன்று போதிய பணவரவு காணப்படும். உங்கள் வங்கி இருப்பு கணிசமாக உயரும்.

இன்று ஆரோக்கியம் நன்றாக இருக்கும். மன அழுத்தங்கள் இருக்காது.

## சிம்மம்

நீங்கள் வெற்றிகரமாக செயலாற்ற திட்டமிடுதல் அவசியம். இன்று நீங்கள் பாதுகாப்பற்றவராக உணர்வீர்கள். அந்த உணர்வை தவிர்த்து நேர்மறை எண்ணத்தை மேற்கொள்வது அவசியம்.

இன்று பணியிடத்தில் எதிர்பாலின சகபணியாளர்களுடன் கவனமாக நடந்துகொள்ள வேண்டியது மிக முக்கியம். வேலையின் போது சில சிக்கல்களை சந்திக்க நேரிடலாம்.

இன்று மிகவும் மகிழ்ச்சியான நாள். இன்று புத்துணர்ச்சியுடன் இருப்பீர்கள். உங்கள் சந்தோஷங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பணப்புழக்கம் சீராக இருக்கும். வரவும் செலவும் சேர்ந்து காணப்படும்.

நீங்கள் இன்று நல்ல ஆரோக்கியத்தை பராமரிக்க முடியும்.

## கன்னி

இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இல்லை. அதிர்ஷ்டத்தை விட இன்று நீங்கள் உங்கள் உழைப்பின் மீது நம்பிக்கை வைத்து செயலாற்ற வேண்டும். முக்கியமான முடிவுகளை இன்று எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடத்தில் உங்களது மேலதிகாரியுடன் சில பிரச்சினைகள் உருவாகும். மேலதிகாரியிடமிருந்து உங்களது வேலைக்கான அங்கீகாரம் கிடைக்காது. அது உங்களுக்கு வருத்தத்தை உண்டாக்கும்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் துணையிடம் குற்றம் காண்பீர்கள்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இல்லை. செலவினங்கள் அதிகமாக காணப்படும்.

உங்கள் தாய் தந்தையரின் உடல் நிலை பற்றிய கவலை இருக்கும்.

## துலாம்

பேசும் வார்த்தைகளில் எச்சரிக்கையும் நட்பான அனுகுமுறையும் மேற்கொண்டால் இன்றைய நாள் சமநிலையோடு இருக்கும். அதனால் அனைத்து விஷயங்களும் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். ஓய்வு கிடைப்பது கடினம். இன்றைய வேலை முறையை திட்டமிட்டு செய்யவும்.

இன்று நல்லுறவை பராமரிப்பது கடினம். உறவில் சில இடையூறுகள் காணப்படும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இல்லை. செலவினங்கள் அதிகமாக காணப்படும். அதனால் வருத்தப்படுவீர்கள்.

இன்று நாள் முழுவதும் அசௌகரியமாக இருக்கும். அதனால் மன அழுத்தம் ஏற்படலாம்.

## விருச்சிகம்

இன்றைய நாள் சிறிது ஏமாற்றத்துடன் காணப்படும். உங்கள் லட்சியங்களை அடைவதில் தடைகள் காணப்படும்.

பணிச்சுமை அதிகமாக காணப்படும். திட்டமிட்டு நேரத்துடன் பணிசெய்வதன் மூலம் தவறுகளை தவிர்க்க முடியும்.

திருமணம் பற்றிய எண்ணம் இருந்தால் அதனை தள்ளிப் போடவும்.உங்கள் துணையுடன் கலந்தாலோசிக்க வேண்டியது அவசியம்.

இன்று பணப்புழக்கம் மிதமாகக் காணப்படும். பணத்தை தக்க வைத்துக்கொள்வது கடினமாக இருக்கும்.

உங்கள் வாழ்க்கைத் துணையின் உடல் நலத்திற்காக செலவுகள் செய்ய வேண்டியிருக்கும். அதனால் உங்களுக்கு கவலையாக இருக்கலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 26.11.2023




இன்று எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய நாள். உங்கள் இலக்குகளை அடைய போராட வேண்டியிருக்கும். பொறுமையும் அமைதியும் தேவை.

பணிகளில் சற்று பின்தங்கியிருப்பீர்கள். இதனால் உங்கள் மேலதிகாரிகளிடத்தில் நல்ல பெயரெடுக்கும் வாய்ப்பை இழப்பீர்கள்.

இன்று காதல் விவகாரங்களில் மிதமான பலன்களே கிட்டும். உங்கள் காதல் விவகாரங்களை வேறு ஒரு நாளுக்கு தள்ளிப் போடவும்.

உங்கள் தேவையை சமாளிக்க சிறிய அளவில் நீங்கள் கடன் வாங்க நேரிடலாம்.

எண்ணெய் பதார்த்தங்களை தவிர்க்கவும். தோல் எரிச்சலினால் நீங்கள் அவதியுறலாம்.




உங்களுடைய உறுதியான முயற்சியின் மூலம் இன்றைய நாள் உங்களுக்கு அதிர்ஷ்டமன நாளாக அமையும்.

இன்று வெற்றியை சந்திப்பீர்கள். உங்கள் முயற்சிகளின் மூலம் பல சாதனைகளைச் செய்வீர்கள்.

இன்று காதல் விவகாரங்களுக்கு ஏற்ற நாள். இன்று நீங்கள் அற்புதமான விஷயங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சாதகமாக உள்ளது. குடும்ப விசேஷங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் இருக்கும் நீங்கள் இன்று சௌகரியமாக உணர்வீர்கள்.




இன்று உங்கள் வசதிகளை பெருக்கிக் கொள்ள நினைப்பீர்கள். இல்லத்தில் அமைதியை நிலைநாட்ட அல்லது அதிகரிக்க நடவடிக்கை எடுப்பீர்கள்.

உங்களின் கீழ் பணிபுரிவோர் செய்த தவறுக்கு நீங்கள் திட்டு வாங்க நேரிடலாம். மேற்கொண்டு அவர்களிடம் கவனமாக பழகுவதற்கு அது உதவிகரமாக இருக்கும்.

இன்று காதலர்களுக்குள் கருத்து வேறுபாடு காணப்படும். இது நீங்கள் தகவல் பரிமாற்றத்தில் செய்யும் சிக்கல்கள் காரணமாக ஏற்படலாம்.

இன்று நிதிநிலைமை லாபகரமானதாக இல்லை. வரவைவிட செலவு அதிகமாக காணப்படும். பணப் பிரச்சினையை சந்திக்க நேரிடும்.

உங்கள் மனதில் உள்ள பதட்டத்தின் காரணமாக தலைவலி உண்டாகலாம்.




இன்று உணர்ச்சிப் பூர்வமாக இருப்பதை விட்டுவிட்டு யதார்த்தமாக இருக்க வேண்டியது அவசியம். உங்களை பாதிக்கக்கூடிய எதிர்மறை எண்ணங்களுக்கு இடம் கொடுக்கா தீர்கள்.

உங்கள் வேலை சமபந்தமாக நீங்கள் பயணம் செய்ய நேரிடலாம். அது பயனுள்ளதாகவும் வெற்றிகரமாகவும் அமையும்.

இன்று காதல் விவகாரங்களுக்கு ஏற்ற நாள். இன்று நீங்கள் அற்புதமான விஷயங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று அதிர்ஷ்டமான நாள். நிறைய பணம் சம்பாதிப்பீர்கள். ஆன்மிக காரியங்களுக்கு பணத்தை பயன்படுத்துவீர்கள்.

தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும்.






# மாவீரர்களின் பெற்றோருக்குக் கௌரவம்

மாவீரர் வாரத்தை ஒட்டி, மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வுகள் தமிழர் தாயகம் எங்கும் பரவலாக நடைபெற்று வருகின்றன. தமிழ் மக்கள் அவற்றில் உணர்வெழுச்சியுடன் பங்கேற்று வருகின்றனர்.

மாவீரர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டு அவற்றுக்கு மக்கள் அஞ்சலி செலுத்துகின்றமையுடன் மண்ணுக்கு அவர்களைத் தந்த அவர்களின் பெற்றோரையும் மற்றும் உறவுகளையும் அவர்கள் கௌரவித்து வருகின்றனர்.




# வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் சுமந்திரன், சுகிர்தன் பங்கேற்றனர்

வடமராட்சி கிழக்கில் மாவீரர் பெற்றோரை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை உடுத்துறையில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட பந்தலில் இடம் பெற்றது.

காலை ஒன்பது முப்பது மணி அளவில் அருகாமையில் இருந்த சந்தியில் இருந்து மாவீரர்களின் பெற்றோர் அழைத்துவரப்பட்டனர்.

பொதுச் சுடரினை நான்கு மாவீரரின் தாயார் ஏற்றிவைத்தார்.

நினைவு படத்திற்கான மலர் மாலையை மாவீரரின் சகோதரி ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோருக்கான கௌரவிப்பு இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எஸ்.சுகிர்தன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.





# வட்டுக்கோட்டை தமிழரசுக் கிளையில் கட்சித் தலைவர் மாவையும் பங்கேற்பு

வட்டுக்கோட்டையில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பும் மாவீரர் நினைவேந்தலும் இலங்கை தமிழரசு கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி கிளை அலுவலகத்தில் இலங்கைத் தமிழரசு கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி கிளைச் செயலாளர் பற்றிக் தனுஷ் தலைமையில் உணர்வுபூர்வமாக நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

இதன்பொழுது தாயக விடுதலைக்காக தன்னுயிரை இன்னுயிராக்கிய மாவீரர் பெற்றோர்களால் ஈகைச் சுடரேற்றப்பட்டு மலரஞ்சலியும் உணர்வு பூர்வமாக செலுத்தப்பட்டது.

தொடர்ச்சியாக மாவீரர்களின் நினைவாக மாவீரர் பெற்றோர்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கி மதிப்பளிக்கபட்டதோடு தொடர்ச்சியாக முன்னாள் போராளி செழியனால் மாவீரர்களின் நினைவுரை முன்னெடுக்கப்பட்டது.

இறுதியாக மாவீரர்களின் பெற்றோர்களுக்கு மதிய போசனமும் பரிமாறபட்டது.

இதன்பொழுது மாவீரர் பெற்றோர் மதிப்பளிப்பு நிகழ்வில் மாவீரர் பெற்றோர்கள், உரித்துடையோர், இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, முன்னாள் போராளி செழியன், இலங்கை தமிழரசு கட்சியின் வட்டுக்கோட்டை மகளிர் அணி செயற்பாட்டாளர்கள், இளைஞர் அணியினர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
















# கரவெட்டி கிழக்குக் காட்டுப்புலத்தில் நேற்று ஜனநாயகப் போராளிகளின் ஒழுங்கமைப்பில்

ஜனநாயக போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் மாவீரர்களின் பெற்றோர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு உணர்வெழுச்சியுடன் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

வடமராட்சி கரவெட்டி கிழக்கு காட்டுப்புலம் பொதுநோக்கு மண்டபத்தில் நேற்றுக் காலை குறித்த நிகழ்வு நடைபெற்றது.

மாவீரர்களது பெற்றோர்கள் மங்கள வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டு உயிர்த் தியாகம் செய்த மாவீரரின் தாயால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் அகவணக்கம் செலுத்தப்பட்டு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இதன் போது மாவீரர்களை நினைத்து பெற்றோர் அழுது கண்ணீர் மல்கினர். 40 மாவீரர்களின் உருவப்படங்கள் பெற்றோருக்கு வழங்கி வைக்கப்பட்டன. மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டு அவர்களுக்கான மதிய உணவும் வழங்கி வைக்கப்பட்டது.










# முல்லைத்தீவு மாவட்டம் விசுவமடுவில்




தமிழ் மக்களுக்கான உரிமை போரில் உயிரிழந்த மாவீரர்களின் பெற்றோர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு பிரதேசத்தில் இடம்பெற்றது.

மாவீரர்களின் பெற்றோர்கள் அழைத்துவரப்பட்டு சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட கொட்டகைகளில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மாவீரர்களுக்கான பொது திருவுருவப்படத்திற்கு சுடர் ஏற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

இதன்போது 150 வரையான மாவீரர் பெற்றோர்கள் மதிப்பளிக்கப்பட்டார்கள்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனும் கலந்து சிறப்பித்தார்.






















# மல்லாவியிலும் நேற்று கௌரவிப்பு நிகழ்வு கஜேந்திரகுமார், காண்டீபன் பங்கேற்றனர்

மல்லாவி பகுதியில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட இடத்தில் மாவீரர் பெற்றோரை கௌரவிக்கும் நிகழ்வு ஒன்று நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் அனிஞ்சியன்குளம் பாடசாலைக்கு முன்பாக இருந்து மாவீரர்களின் பெற்றோர்கள் அழைத்து வரப்பட்டதனைத் தொடர்ந்து பொதுச் சுடரை மூன்று மாவீரரின் தாயார் ஏற்றி வைத்தார்.

நினைவுப் படத்திற்கான மலர் மாலையை மூன்று மாவீரரின் தாயார் அணிவித்தமையைத் தொடர்ந்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு அகவணக்கம் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோருக்கான கௌரவிப்பு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் சட்டத்தரணி காண்டீபன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வில் மல்லாவி மற்றும் பாண்டியன்குளம், துணுக்காய் பகுதிகளைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்கள் கலந்துகொண்டிருந்தனர்.










# பருத்தித்துறை மாலு சந்தியில்



வடமராட்சி பருத்தித்துறை மாலு சந்தி மண்டபத்திலும் நேற்று மாலை மாவீரர் பெற்றோர் கௌரவிப்ப. நிகழ்வு நடைபெற்றது.

இதன் போது மாவீரர்களுக்கு சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன் பெற்றோர்களும் கௌரவிக்கப்பட்டனர்.










# நீர்கொழும்பிலிருந்து யாழுக்கு 'சமாதான சைக்கிள் பயணம்'!

## முதியவரின் சாதனை முயற்சி




"சமாதான சைக்கிள் பயணம்" என்ற தொனிப்பொருளில் 67 வயதுடைய நபர் ஒருவர் நேற்று சைக்கிளில் நீர்கொழும்பு கொச்சிக்கடை பம்புக்குளிய தேவாலயம் முன்னாலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிய 24 மணிநேர சாதனைப் பயணத்தில் ஈடுபட்டு பலரது கவனத்தையும் ஈர்த்து வருகிறார்.

இச்சாதனையில் ஈடுபட்டுள்ள ரிச்சர்ட் பெர்னாந்து நுவன் புள்ளே என்ற இந்த நபர், 361 கிலோமீட்டர் தூரத்தை துவிச்சக்கரவண்டியில் 24 மணித்தியாலங்களுக்குள் கடந்து யாழ்ப்பாணத்தை சென்றடையவுள்ளார் எனக் கூறப்படுகிறது.

இப்பயணத்தை ஆரம்பிப்பதற்காக பம்புக்குளிய பிரதேசத்தில் உள்ள முதியவரது இல்லத்தில் இருந்து அவர் மேளதாள வாத்தியத்துடன் பிரதேசவாசிகளால் பம்புக்குளிய தேவாலயம் வரை ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து பம்புக்குளிய தேவாலயத்தில் இடம்பெற்ற சர்வமத தலைவர்களின் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்ட பின்னர், பிற்பகல் 12.45 மணியளவில் அவர் தனது பயணத்தை ஆரம்பித்தார்.

இந்த முதியவர் கடந்த வருடம் நவம்பர் 25ஆம் திகதி நீர்கொழும்பு, கொச்சிக்கடை பிரதேசத்தில் இருந்து மடு தேவாலயம் வரை 13 மணித்தியாலங்களுக்குள் துணிச்சக்கரவண்டியில் சென்று சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.







# தேவையான சீனியில் 10 வீதம் மாத்திரமே உள் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது



நாட்டிற்கு 6 லட்சம் மெட்ரிக் தொன் சீனி தேவைப்படுவதாகவும் அத் தேவையின் 10 வீதம் அல்லது 60 ஆயிரம் மெட்ரிக் தொன் சீனியே இலங்கையில் உற்பத்தி செய்யப்படுவதாகவும் பொருள்களின் ஏற்றுமதியை அதிகரிப்பது தொடர்பான துறைசார் மேற்பார்வைக்குழு தெரிவித்துள்ளது.

மேற்பார்வைக்குழு நாடாளுமன்றத்தில் கூடிய போதே இந்தத் தரவுகளை வெளிப்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், சீனி உற்பத்தியை அடுத்தாண்டு அதிகரிப்பதற்கான செயற்றிட்டத்தை மூன்று மாதங்களுக்குள் தயாரித்து சமர்ப்பிக்குமாறு துறைசார் மேற்பார்வைக்குழு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

சீனி நுகர்வு தொடர்பான மக்களிடம் காணப்படும் தெளிவு மிகக்குறைவாக உள்ளதால், உரிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், முறையான வேலைத் திட்டத்தை தயாரிக்கவும் அதிகாரிகளுக்கு மேற்பார்வைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

இதனிடையே, சீனித் தொழிற்சாலைகளின் துணைத் தயாரிப்பான எத்தனோலின் மிகை உற்பத்தியை தரநிலையுடன் ஏற்றுமதி செய்வதற்கான வேலைத்திட்டம் தேவையென அதிகாரிகளால் இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

எத்தனோல் இறக்குமதியை தடை செய்ததன் மூலம் சீனித் தொழிற்சாலைகள் தற்பொழுது இலாபமடைந்து வருவதாகவும் குழுவில் வெளிக் கொணரப்பட்டுள்ளது.

சீனி உற்பத்தியின் துணை தயாரிப்பான இந்த எத்தனோல், மதுபான தயாரிப்பிற்காக பயன்படுத்தப்படுவதால், சீனித் தொழிற்சாலைகளுக்கு மதுபான தயாரிப்பிற்கான அனுமதிப் பத்திரம் வழங்குவது மிகவும் வினைத்திறனானது என அதிகாரிகள் குழுவில் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், 2024 ஆம் ஆண்டில் சீனி உற்பத்தியை அதிகரிப்பதற்கான செயற்திட்டத்தை வழங்குமாறு அதிகாரிகளுக்கு மேற்பார்வைக் குழுவினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

## மூன்றரைக் கிலோ கஞ்சா பொதியுடன் ஊர்காவற்றுறையில் இரண்டு பேர் கைது

யாழ்ப்பாணம் ஊர்காவற்துறை பகுதியில் கேரள கஞ்சாவுடன் இருவர் இன்றையதினம் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் மோட்டார் சைக்கிளில் கேரள கஞ்சா பொதிகளை கொண்டு சென்றபோது கடற்படையினரின் தகவலுக்கமைய பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

3.5 கிலோகிராம் வரையான கேரள கஞ்சா இதன் போது கைப்பற்றப்பட்டது.

சந்தேக நபர்களை, கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியவற்றுடன் ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.






## லக்விஜய மூன்றாவது மின்பிறப்பாக்கி மின் கட்டமைப்புடன் இணைக்கப்படும்

### மின்சார சபை அறிவிப்பு

பராமரிப்பு பணிகளுக்காக செயலிழக்க செய்யப்பட்ட நுரைச்சோலை லக்விஜய அனல் மின்னுற்பத்தி நிலையத்தின் மூன்றாவது மின்பிறப்பாக்கியை எதிர்வரும் 29 ஆம் திகதி தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கவுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இயந்திரக்கோளாறினால் செயலிழக்க செய்யப்பட்ட நுரைச்சோலை அனல் மின்னுற்பத்தி நிலையத்தின் இரண்டாவது மின்பிறப்பாக்கியை அடுத்த மாதம் 16 ஆம் திகதி தேசிய மின் கட்டமைப்புடன் இணைப்பதற்கான இயலுமை காணப்படுவதாக இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் பொறியியலாளர் நோயல் பிரியந்த தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எரிவாயு மற்றும் நீராவி விசையாழியின் பராமரிப்பு பணிகள் காரணமாக களனிதிஸ்ஸ அனல் மின் நிலையம் கடந்த 17 ஆம் திகதி முதல் 6 வார காலத்திற்கு மூடப்பட்டுள்ளது.

மழையுடனான வானிலையால் தற்போது நாளாந்த மின்னுற்பத்தியில் 64 வீத மின்சாரம், நீர் மின்னுற்பத்தி ஊடாகவே பெறப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ராஜஸ்தான் சட்டப்பேரவை தேர்தல்: நேற்று விறுவிறுப்பான வாக்குப்பதிவு



ராஜஸ்தான் சட்டப்பேரவைத் தேர்தல் விறுவிறுப்பான வாக்குப்பதிவு நேற்று நடைபெற்றுது.

ராஜஸ்தானில் சட்டப்பேரவை தேர்தல் நேற்று ஒரே கட்டமாக நடைபெற்றது. வாக்குப்பதிவு காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெற்றது. மொத்தம் 200 சட்டப்பேரவை தொகுதிகள் உள்ளன. கங்காநகர் மாவட்டத்தின் காரன்பூர் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் குர்மீத் சிங் இறந்ததால், அந்த தொகுதியில் மட்டும் தேர்தல் தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

தேர்தலுக்காக மாநிலம் முழுவதும் 51 ஆயிரத்து 756 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டன. 5.25 கோடி பேர் தகுதி பெற்ற வாக்காளர்கள். இதில் 2.73 கோடி பேர் ஆண்கள், 2.52 கோடி பேர் பெண்கள். மொத்தம் 1,862 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். முதியவர்கள், மாற்றுத் திறனாளிகள் 61 ஆயிரத்து 021 பேர் ஏற்கெனவே வீட்டில் இருந்தபடி வாக்களித்து விட்டனர். வாக்குப்பதிவு அமைதியான முறையில் நடக்க, மாநிலம் முழுவதும் தேர்தல் ஆணையம் தீவிர ஏற்பாடுகளை செய்திருந்தது.

ராஜஸ்தானில் பா.ஜ.க. – காங்கிரஸ் இடையே நேரடி போட்டி நிலவுகிறது. இங்கு கடந்த 25 ஆண்டுகளாக காங்கிரஸ், பா.ஜ.க. மாறி மாறி ஆட்சியை பிடித்து வருகின்றன. இந்த முறை ஆட்சியை தக்கவைப்போம் என காங்கிரஸ் நம்புகிறது. அடுத்த ஆட்சியை அமைக்க பா.ஜ.க. தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

மத்திய அமைச்சர்கள் கஜேந்திர சிங் ஷெகாவத், அர்ஜுன் ராம் மேக்வால், முன்னாள் முதல்வர் வசுந்தரா ராஜே சிந்தியா, முன்னாள் துணை முதல்வர் சச்சின் பைலட், முன்னாள் மத்திய அமைச்சர் ராஜ்யவர்த்தன் ரத்தோர், பா.ஜ.க. மாநில தலைவர் சி.பி. ஜோஷி உள்ளிட்டோர் காலையிலேயே வரிசையில் நின்று தங்கள் வாக்குகளை செலுத்தினர்.

வாக்களித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால், ராஜஸ்தானில் வலிமையான அரசை பா.ஜ.க. அமைக்கும். பெண்கள் அதிக அளவில் இம்முறை வாக்களிப்பார்கள். ஜனநாய கத்தின் வலிமையை நாம் பார்ப்போம் என குறிப்பிட்டார்.

பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டுள்ள பதிவில், ராஜஸ்தானில் தேர்தல் நடைபெறுகிறது. அனைத்து வாக்காளர்களும் வாக்களிக்க முன்வர வேண்டும். மிகப் பெரிய சதவீதத்தில் வாக்குப்பதிவு நடைபெற வேண்டும். முதல்முறையாக வாக்களிக்க உள்ள இளைஞர்களுக்கும் இளம் பெண்களுக்கும் வழ்த்துக்கள் என தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தானில் நேற்று பதிவு செய்யப்பட்ட வாக்குகள் டிசெம்பர் .3 ஆம் திகதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

# உத்தராகண்ட் சுரங்க விபத்து: கைகளால் துளையிட திட்டம்!

உத்தராகண்ட் சுரங்கத்தை கிடைமட்டத்தில் துளையிட்டு வந்த ஆகர் இயந்திரம் பழுதடைந்துள்ளதையடுத்து, மீதமுள்ள பகுதிகள் கைகளால் துளையிட திட்டமிடப்பட்டுள்ளது என உத்தராகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி தெரிவித்துள்ளார்.

உத்தராகண்ட் மாநிலம் சார்தாம் நெடுஞ்சாலை திட்டத்தின் ஒரு பகுதியாக சில்க்யாரா – பர்கோட் இடையே 4.5 கிலோ மீற்றர் தொலைவுக்கு சுரங்கப் பாதை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த நிலையில், சுரங்கப் பாதையின் ஒரு பகுதியில் கடந்த 12 ஆம் திகதி மண் மற்றும் பாறைகள் சரிந்ததை அடுத்து, 41 தொழிலாளர்கள் உள்ளே சிக்கியுள்ளனர்.

அவர்களை மீட்கும் நோக்கில், சில்க்யாரா பகுதியில் உள்ள சுரங்கத்தின் நுழைவுப் பகுதி வழியாக இடிபாடுகளின் ஊடாக 800 மில்லி மீற்றர் விட்டத்துக்கு துளையிடும் பணி நடைபெற்று வந்தது.

இதற்காக, பாறைகளை வேகமாக குடையும் அமெரிக்காவின் ஆகர் இயந்திரம் பயன்படுத்தப்பட்டு வந்தது. 46 மீற்றர் அளவுக்கு குடையப்பட்டு, உள்ளே உள்ள தொழிலாளர்களை வெளியே அழைத்து வர இரும்பு பைப்புகள் பொருத்தப்பட்டுள்ளன. இன்னும் 10 சதவீத துளையிடும் பணி மட்டுமே எஞ்சி இருந்தது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு திடீரென அந்த இயந்திரத்தின் பிளேடுகள் உடைந்து இயந்திரம் பழுதடைந்து உள்ளே சிக்கிக் கொண்டது. இதனால், தற்போது துளையிடும் பணி நிறுத்தப்பட்டுள்ளது.

அடுத்த கட்டமாக முயற்சியை முன்னெடுக்க இரண்டு வாய்ப்புகள் திட்டமிடப்பட்டுள்ளன. முதல் வாய்ப்பாக, மீதமுள்ள பகுதிகளை துளையிட, உள்ளே சிக்கி உள்ள ஆகர் இயந்திரத்தை முதலில் வெளியே எடுக்க வேண்டும். இதற்காக, ஹைதராபாத்தில் உள்ள இரும்பை வெட்டும் இயந்திரத்தைக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆகர் இயந்திரத்தை வெளியே எடுத்த பிறகு, துளையிடும் பகுதியை கைகளால் துளையிட வேண்டும்.

இவ்வாறு கைகளால் துளையிடுவதால், இயந்திரத்தைக் கொண்டு துளையிடுவதை விட கூடுதலாக 18 – 24 மணி நேரம் ஆகும் என கணிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது வாய்ப்பாக, மேல் பகுதியில் இருந்து செங்குத்தாக புதிதாக துளையிடுவது. இதற்கான இயந்திரமும் தற்போது கொண்டு வரப்பட்டுள்ளது. அதனை துளையிடும் பகுதியில் பொருத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனினும், கிடைமட்டமாக துளையிடுவதற்கே முதல் முன்னுரிமை கொடுக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

# 42 பாலஸ்தீன பணயக்கைதிகளுக்கு ஈடாக 14 இஸ்ரேலியர்களை விடுவிக்கும் ஹமாஸ்










இஸ்ரேல் – ஹமாஸ் இடையில் தற்காலிக போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலில் உள்ளது.

இந்த நிலையில், போர் நிறுத்த ஒப்பந்தத்தின் படி, இரு தரப்பும் பணயக் கைதிகளை விடுவித்து வருகின்றன.

இதன் அடுத்த கட்டமாக 42 பாலஸ்தீன கைதிகளுக்கு ஈடாக 14 இஸ் ரேல் கைதிகளை ஹமாஸ் விடுவிக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இரு தரப்புகளுக்கும் இடையே மத்தியஸ்தர்களாக செயற்படும் எகிப்தும் கட்டாரும் ஹமாஸ் வழங்கிய பட்டியலை இஸ்ரேலிடம் வழங்கியுள்ளன.

ஹமாஸ் அமைப்பினர் இதுவரை 240 பணயக்கைதிகளில் 24 பேரை விடுதலை செய்துள்ளது. இந்த நிலையில், அதற்கு ஈடாக இஸ்ரேல் 39 பாலஸ்தீனக் கைதிகளை விடுவித்துள்ளது.

இந்த நிலையில், காசாவில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ள பணய கைதிகளின் பெயர் விபரங்கள் தமக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக இஸ்ரேலிய பிரதமர் அலுவலகம் உறுதிசெய்துள்ளது.

அத்துடன், ஹமாஸ் தரப்பிருடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், 150 பாலஸ்தீனிய பணய கைதிகள் நான்கு நாட்களில் விடுவிக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மருத்துவப்பொருட்கள், எரிபொருள் மற்றும் உணவுப்பொருள்களுடன் 137 பாரவூர்திகள் நேற்று காசாவுக்குள் நுழைந்துள்ளன என சர்வதேச ஊடகங்கள் குறிப்பிடுகின்றன.

அத்துடன், காசாவின் தெற்கு பகுதியில் இருந்து வடக்கு நோக்கி செல்ல வேண்டாம் என இஸ்ரேலிய இராணுவம், பாலஸ்தீனிய மக்களை எச்சரித்துள்ளது.

போர் நிறுத்தமானது தற்காலிகமானது என்பதுடன் காசாவின் வடக்கு பகுதி ஒரு போர் மண்டலம் எனவும் இஸ்ரேலிய இராணுவம் அறிவித்துள்ளது.

# இத்தாலியில் எரிமலை வெடித்து சிதறியது!

இத்தாலியில் மவுண்ட் எட்னா எரிமலை வெடித்து சிதறி தீ குழம்பை வெளியேற்றி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இத்தாலியின் ரோம் நகரில் இருந்து 500 கிலோ மீற்றர் தொலைவில் சிசிலி தீவில் உலக புகழ்பெற்ற மவுண்ட் எட்னா எரிமலை அமைந்துள்ளது.

மவுண்ட் எட்னா எரிமலை கடல் மட்டத்தில் இருந்து 3 ஆயிரத்து 300 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ளது.

மவுண்ட் எட்னா எரிமலை அடிக்கடி வெடித்து சிதறுவது வழக்கமாக இருந்து வந்த நிலையில், தற்போது மீண்டும் மவுண்ட் எட்னா எரிமலை வெடித்து சிதறி தீ குழம்பை வெளியேற்றி வருகிறது.



பனி மூடிய எட்னா எரிமலை சூடான எரிமலை குழம்பை கக்கி வருவதால் ஒரே புகை மண்டலமாக அப்பகுதி மாறியுள்ளது.

மேலும் எரிமலை வெடிப்பினால் ஏற்பட்டுள்ள சாம்பல் கழிவுகள் மத்திய தரைக்கடல் பகுதியில் தீவில் கரைவது வாடிக்கையாக உள்ளது.